**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண்.78/2014** **நாள்.11.08.2026**

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 நாள் பிரதிவாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அலமேலு | தொழில் | |
| த. பெ./க.பெ. | பெருமாள் | சாதி | |
| கிராமம் | மலையனூர் | மதம் | இந்து |
| வட்டம் | மேல்மலையனூர் | வயது | 59 |

**பி.சா.1**

**மனுவின் பெயரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

என் தம்பியின் சொத்தை விற்று கடன் திருப்பி கொடுத்ததாக சொல்லி உள்ள நிலையில் யார் யாரிடம் கடனை அடைத்தோம் என்றால் என் தம்பி யாரிடமும் கடன் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படுவது என் தம்பி சொத்தை நாங்கள் கிரையம் செய்த பத்திரமா என்றால் தெரியாது. எனக்கு முன்பாக என் அப்பா அம்மா ஆகியோர் தரப்பினராக இருந்து வழக்காடினார்கள் என்றால் சரிதான். என் பெற்றோர் தரப்பில் தாக்கல் செய்த பதில் உரை விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் தம்பி இறப்பதற்கு முன் அவருடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லதாதால் அவர் யார் யாரிடம் கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் தம்பி ஏழுமலை வெளியூர் சென்று மீன், கருவாடு விற்கும் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். அந்த வகையில் ஏழுமலை யாரிடம் கடன் வாங்கி உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அப்படி தான் சண்முகம் என்பவரிடம் ஏழுமலை வழக்கு கடனை வாங்கி உள்ளார் என்றால் சரியல்ல. 01.06.2012 அன்று ஏழுமலை எங்கு இருந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 01.06.2012 அன்று ஏழுமலை சண்முகத்திடம் வழக்கு தொகையை கடனாக பெற்றிருந்தார் என்றாலும் அதை சண்முகம் பலமுறை வந்து ஏழுமலையிடமும் என் தந்தையிடமும் திருப்பி கேட்டார் என்றாலும் சரியல்ல. ஏழுமலை இறந்த பிறகும் என் அப்பாவிடம் தொகையை திருப்பி கேட்டு அவர் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு சண்முகம் என்பவருக்கு பணம் அவசர தேவை ஏற்பட்டதால் வாதியிடம் தொகை பெற்றுக் கொண்டு வாதிக்கு மேடு ஓவர் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. பின்னிட்டு வாதி வந்து என் பெற்றோரிடம் தொகையை திருப்பி செலுத்த சொல்லி கேட்டார்

என்றால் சரியல்ல. இதற்காக சட்ட அறிவிப்பு அனுப்பியதை பெற்றுக் கொண்டு என் பெற்றோர் வா.சா.ஆ.9 கேவியட் மனுதாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. முதல் விசாரணை சங்கதிகளை பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.